# பயிற்சி மையம் துவக்கம்

**கோவை, ஆக. 19 -**
'க்ளினிமைண்ட்ஸ் கோயம்புத்தூர் மையம்' திறப்பு விழா, ஆர்.எஸ்.புரத்தில் நடந்தது.

விழாவில் நடந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் க்ளினிமைண்ட்ஸ் நிறுவன இயக்குனர் கமல்சஹானியும், கோவை கே.டி.வி.ஆர்., மருத்துவமனை இயக்குனர் டாக்டர் விஜய்வெங்கட்ராமனும் கையெழுத்திட்டனர்.

மையத்தின் இயக்குனர் கமல்சஹானி கூறுகையில், ''மருந்தியல் ஆராய்ச்சித்துறை வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிப்பதை நோக்கமாக கொண்டு இம்மையம் துவக்கப்பட்டுள்ளது. மருந்தியல் ஆராய்ச்சித்துறையில் வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளது. இதுதொடர்பான பயிற்சி அளிக்கப்படும்,'' என்றார்.

கே.டி.வி.ஆர்., மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் ஜனார்த்தனம், பி.எஸ்.ஜி., மருத்துவமனை இருதயத்துறை தலைவர் டாக்டர் புவனேஸ்வரன், கே.எம்.சி.எச்., துணைத்தலைவர் அனந்தபத்மநாபன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



'க்ளினிமைண்ட்ஸ் கோயம்புத்தூர்' மைய திறப்பு விழாவில், மைய இயக்குனர் கமல்சஹானியும், கோவை கே.டி.வி.ஆர்., மருத்துவமனை இயக்குனர் டாக்டர் விஜய்வெங்கட்ராமனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரிமாறிக்கொண்டனர்.